*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *X*, பதிப்பு *24*, ஜூலை - டிசம்பர் 2026
*Formally UGC Approved Journal (64089), © Author*

# சங்கப் பனுவல்களில் தொல்காப்பிய மரபியல் கூறும் இளமைப்பெயர்கள்

**முனைவர் ந.அரவிந்த்குமார்**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை**
**கேபிஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரி**
**அரசூர், கோயம்புத்தூர்**

**ஆய்வுச்சுருக்கம்**

*மனித வாழ்வின் நடைமுறை நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட செயல்பாடுகள் மரபுகளாகத் தோற்றம் பெறுகின்றன. அம்மரபுகளையொட்டிய பழக்க வழக்கங்கள், சடங்கியல்கள் முதலியவை இலக்கியங்களின் பாடுபொருள்களாக அமைகின்றன. அவற்றோடு சேர்த்துப் புலவர்கள் காலச்சூழலுக்கேற்ற மரபுநிலை மாற்றங்களையும் இலக்கியங்களில் பதிவுசெய்கின்றனர். மரபுநிலையில் அமையப்பெறும் அக, புறக்கூறுகளைத் தொல்காப்பியர் மரபியலில் பகுத்துக் காட்டியுள்ளார். செய்யுள் நெறியுடன் மரபுநிலைக்குரிய உயிரினப்பாகுபாட்டைத் தொல்காப்பியம் விளக்கும்போது ஆண்பாற்பெயர், பெண்பாற்பெயர், இளமைப்பெயர் என்ற மூன்றையும் விவரிக்கின்றது. தொல்காப்பிய மரபியல் உரைக்கும் இளமைப் பெயர்கள் தமிழரின் வாழ்வியல் கருவூலமான சங்க நூல்களிலும் பொருந்தி வருகிறது. திணை இலக்கியமாகிய சங்க நூல்கள் ஐந்நிலப் பாகுபாட்டின் அடிப்படையில் தரவுகளைத் தொகுத்தளிப்பதால் அதில் உயிர்களாகிய கருப்பொருள்களின் தன்மையும் விளக்கப்பட்டுள்ளன.*

*அவ்வுயிர்களின் இயல்பு உள்ளுறை, இறைச்சி என்ற நிலையில் மறைந்தும் வெளிப்படையாகவும் வருவதைக் காணமுடிகிறது. அவ்விளமைப் பெயர்கள் காலமாறுதலினால் தற்காலத்தில் திரிபினை அடைந்தபோதும், சங்க நூல்களில் தொல்காப்பியம் உரைத்த பாங்கிலேயே அமைந்துள்ளன என்பது இவ்வாய்வின் மூலம் வெளிப்படுத்தப்படும் மெய்ம்மையாகும்.*

**திறவுச்சொற்கள்**

மரபு – இளமைப்பெயர்கள் – வழக்கு – பழமை – பார்ப்பு – பறழ் – குருளை – கன்று.

**முன்னுரை**

மக்களினுடைய நடைமுறை வாழ்க்கையில் பேணப்படும் பழமையான மரபுகளைக் கருவாகக் கொண்டே இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. புலவர்கள் தம்முடைய அனுபவத்தால் கண்டுணர்ந்த கருத்துகளையும், தாம் வாழ்ந்த காலத்தில் வழக்கிலிருந்த பழக்கவழக்கங்களையும் நூல்களில் பதிவுசெய்தனர். அச்செயல்பாட்டின் மூலம் காலந்தோறும் உள்ள மரபுகள் தொடர்ந்து வந்தன. மரபு என்பது பழமையின் வழக்காய்த் தொடர்வதாகும். உலக வழக்காக அமைந்த பண்பாட்டுக் கூறுகள் இலக்கியங்களில் செய்யுள் வழக்காக இடம்பெறும் போதே நிலைப்பேற்றைப் பெறுகின்றன. தமிழரின் பண்பாட்டுக் களஞ்சியமாகத் திகழ்கின்ற தொல்காப்பியத்தில் மக்களின் அக, புறவாழ்வில் அமைந்த மரபுகளும், செய்யுள் நெறியில் இடம்பெறும் மரபுகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. முன்னோரால் உண்டாக்கப்பட்ட மரபுகளை அந்நிலை திரியாது வழங்க வேண்டும் என்பதைத் தொல்காப்பியத்தில் அமைந்த மரபியல் வலியுறுத்துகிறது. அம்மரபியலில் உயிரினங்களின் இளமைப்பெயர், ஆண்பாற்பெயர், பெண்பாற்பெயர், உயிர்ப்பாகுபாடு முதலியவை விளக்கப்பட்டுள்ளன. தமிழரின் வாழ்வியல் கருவூலமாகிய சங்க நூல்களிலும் இவ்வுயிரினப் பாகுபாடும், அவற்றின் மரபுப் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் உயிர்களின் இளமைப் பெயர்கள் இருதிணைக்கும் பொதுவானவையாக அமைகின்றன. அவ்விளமைப் பெயர்கள் சங்க நூல்களில் அமைந்துள்ள தன்மையினை ஆராய்ந்து வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

**'மரபு'- விளக்கம்**

மக்களினுடைய வாழ்க்கை நிகழ்வுகளில் அமைய வேண்டிய செயல்பாடுகளாக முன்னோர்கள் வகுத்துரைத்தவை மரபு என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. இதனை,

**"எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்**
**செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே"**

**(நன்.நூற்-388)**

என்று நன்னூல் நூற்பா எடுத்துரைக்கின்றது. மரபு என்பது இலக்கணம், பழமை, வரலாற்று முறைமை, வழக்குமுறை, வழிமுறை, இயல்பு, மேம்பாடு, பருவம், பாரம்பரியம் என்ற பலபொருள் குறித்த ஒரு சொல்லாகும். மரபு என்ற சொல் தொல்காப்பியத்தில் 'இலக்கணம்' என்ற பொருளிலும், சங்க இலக்கியத்தில் 'முறைமை' என்ற பொருளிலும் எடுத்தாளப்பட்டுள்ளது. இலக்கிய, இலக்கண நூல்களில் அமையப்பெறும் மரபானது உயர்ந்தோர் கூறிய வழக்காக அமைவது என்பதை இராசமாணிக்கனார் கூறும்போது,

**"மக்களுக்கு வாழ்வும் வளமும் தாழ்வும் சாவும் உண்டு. இவ்வாறே சொற்களுக்கும் இந்நான்கும் உண்டு. சொற்கள் மக்களைச் சார்ந்தே இந்நான்கு நிலைகளையும் அடைகின்றன. மக்கள் பல நூற்றாண்டுகளாக ஒரு சொல்லை ஒருமுறை பற்றியே வழங்கி வருவராயின் அவர்தம் பின்னோர் அம்முறையிலேயே அதனை வழங்குதல் மரபு" (தமிழ்மொழி இலக்கிய வரலாறு, டாக்டர் மா.இராசமாணிக்கனார்,ப-121)** எனக் குறிப்பிடுகின்றார். பலகாலம் மக்களால் பேணப்பட்டு வந்த உலகியல் வழக்கின் நடைமுறை மரபுகளைப் பிற்காலத்தவரும் அறிந்து, செயல்படுத்தும் வகையில் புலமையில் சிறந்த முன்னோர்கள் அவற்றை இலக்கியங்களில் கருவாக அமைத்துப் பாடினர். அச்செயல்பாட்டின் மூலம் பழந்தமிழர் மேற்கொண்ட வாழ்வியல் மரபுகளையும், பண்பாட்டுப் பின்புலத்தையும் அறிந்து கொள்ளமுடிகிறது.

பழந்தமிழரின் மரபுநிலை குறித்த கருத்தாக்கங்களைத் தொல்காப்பியம் எடுத்துரைக்கிறது. உலகியல் வழக்காற்றிற்கு இலக்கணம்

வகுத்த தொல்காப்பியம் செய்யுள் வழக்கில் மரபுநிலை திரிதலில்லை எனக் குறிப்பிடுகின்றது. இதனை,

**“மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை**
**மரபுவழி பட்ட சொல்லி னான”**

**(தொல்.பொருள்.மர.நூற்-636)**

என்ற நூற்பா உணர்த்துகிறது. இதன்மூலம் செய்யுள் நிலையிலும் மரபு என்பது அவசியமாவதை அறிய முடிகிறது. மக்களின் பெருவழக்கில் உள்ள மரபுகளைச் செய்யுள்களில் அமைத்துப் பாடுவதன் மூலம் அம்மரபுகள் காலந்தோறும் நிலைத்திருக்கின்றன. தொல்காப்பியம் செய்யுள்நெறிக்குரிய வகையில் எழுத்து, சொல், பொருள் என்ற முப்பகுப்பாய் அமைந்தது. அப்பகுப்பில் அமைந்த இயல்களில் மரபினைக் குறித்துக் கூறுவனவாக நூன்மரபு, மொழிமரபு, தொகைமரபு, விளிமரபு, மரபியல் என்ற ஐந்தும் அமைகின்றன. இதில் வழக்கிலும் செய்யுளிலும் நிலைத்த மரபினைத் தனித்துரைக்க எண்ணித் தொல்காப்பியர் மரபியலை வகுத்துள்ளார். மரபியல் என்ற சொல், மரபு + இயல் எனப் பிரிந்து மரபுடன் புணர்ந்த இயல் என்ற பொருளைத் தருகிறது. முன்னோர் கூறிய சொல் முறைமைகளை முறை பிறழாது சுட்டும்போது அதன் இயல்பு புலப்படாது இருப்பினும், காலத்திற்கேற்ற நிலையில் புதுமை நோக்கில் இலக்கணங்களை வகுத்து முன்னோர் கூறிய முறையை மாற்றும் பொழுது ஏற்படும் சிக்கல்கள் மரபுப் பெயர்களின் தனித்துவத்தை உணர்த்தும் என்பது மரபியலின் பயனாகும்.

மரபியலின் கட்டமைப்பைப் பேராசிரியர், **மரபென்ற பொருண்மை என்னை யெனின், கிளவியாக்கத்து மரபென்று வரையறுத்து ஓதப்பட்டனவுஞ் செய்யுளியலுள் மரபென்று ஓதப்பட்டனவுமன்றி, இருதிணைப் பொருட்குணனாகிய இளமையும் ஆண்மையும் பெண்மையும் பற்றிய வரலாற்று முறைமையும், உயர்திணை நான்கு சாதியும் பற்றிய மரபும், அவை பற்றி வரும் உலகியல் மரபும், நூல் மரபுமென இவையெல்லாம் மரபெனப்படுமென்பது” (தொல்.பொருள்.பேரா.உரை.நூ-556)** எனக் குறிப்பிட்டுள்ளார். பொதுநிலையில் மரபியல், உயிரினங்களின் பெயர் வழக்காறு, சமூக அமைப்பு, நூல் இலக்கணம் என்ற மூவகைப் பகுப்பினைக்

கொண்டதாக அமைந்திருக்கிறது. இவற்றுள் உயிரினங்களின் பெயர் வழக்காற்றினுள் உயிர்களின் இளமைப்பெயர், ஆண்பாற் பெயர், பெண்பாற்பெயர் முதலியவை இடம்பெற்றுள்ளன. இவை தொகை, விரி என்ற நிலையில் வரிசைப்படுத்தி உரைக்கப்பட்டுள்ளன.

**மரபியல் கூறும் இளமைப்பெயர்கள்**

தொல்காப்பியம் உரைக்கும் பெயர் மரபுகளுள் முதலாவதாகிய இளமைப்பெயர் உயர்திணை, அஃறிணை இரண்டிற்கும் பொதுவாக அமைந்துள்ளது. இதனை,

"**மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பின்**
**பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்**
**கன்றும் பிள்ளையும் மகவும் மறியுமென்று**
**ஒன்பதும் குழவியோ டிளமைப் பெயரே**"

**(தொல்.பொருள்.மர.நூற்-545)**

என்ற நூற்பா எடுத்துரைக்கிறது. இருதிணைக்கும் பொதுவான இளமைப்பெயர் களாகப் **பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி, குழவி** என்ற ஒன்பதும் அமைகின்றன. "**மாற்றரும் சிறப்பின் மரபியல் என உரைத்ததனால் எக்காலத்தும் இவ்விளமைப்பெயர்கள் தம்முடைய மரபுகளிலிருந்து திரிந்து வழங்கப் படாது என்றும், இப்பெயர்களின்றி வரும் பிற இளமைப்பெயர்கள் செய்யுளின்பம் கருதி வழக்கொடு பொருந்திய மரபில் பிறழவும் செய்யும் என்றும் கூறப்படுகிறது" (தொல்.பொருள்.மரு.உ.ப-401).**

**சங்கப் பனுவல்களில் இளமைப்பெயர்கள்**

இயற்கையோடு இணைந்த வாழ்வியலை மேற்கொண்ட தமிழரின் பண்பாட்டில் உயிரினங்களின் சிறப்பியல்புகள் தனித்துவமாக விளக்கப்பட்டுள்ளன. சங்கச் சான்றோர் உலகியல் வழக்கோடும் செய்யுள் வழக்கோடும் பொருந்துமாறு தம் பாடல்களில் அவ்வுயிரினப் பாகுபாட்டிற்குரிய பெயர்களை அமைத்துப் பாடியுள்ளனர். இருதிணைக்கும் உரியனவாகத் தொல்காப்பியம் வகுத்துரைக்கின்ற இளமைப் பெயர்கள் சங்கச்சான்றோரின் பாடல்களில் உவமை காட்டி விளக்கும் இடங்களிலும்,

இயற்கையின் வளத்தைக் கூறும் இடங்களிலும், தலைவன் தலைவியின் இயல்பினை விவரிக்கும் போதும் எடுத்தாளப்பட்டுள்ளன.

**பார்ப்பு**

பார்ப்பு என்பது பறவையினத்திற்குரிய இளமைப்பெயராகும். பார்ப்பு என்பதை தற்காலத்தில் பாப்பா என வழங்குகின்றனர் எனப் புலவர் குழந்தை (தொல்காப்பியர் காலத்தமிழர்.ப-95) எடுத்துரைக்கின்றார். ஊர்ந்து செல்கின்ற உயிர்களையும் பார்ப்பு எனும் இளமைப்பெயரால் வழங்குவது மரபாகும். இக்கருத்தினை,

**"அவற்றுள்**
**பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்று இளமை"**

**(தொல்.பொருள்.மர.நூற்-548)**

**"தவழ்பவை தாமும் அவற்றோர் அன்ன"**

**(மேலது.நூற்-549)**

என்ற நூற்பாக்கள் எடுத்துரைக்கின்றன. தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்து செல்கின்ற காலத்தில் தோழியானவள், தலைவியை நோக்கித் தலைவனின் பிரிவை நீ தாங்கிக் கொள்வாயா எனக் கேட்கிறாள். அதற்குத் தலைவி, கூட்டமாக மயில்கள் வாழும் செறிந்த மரங்கள் நிறைந்த காட்டில் மழை பொழிகிறது. அம்மழைப் பொழிவினால் அங்குள்ள குரங்குகள் குட்டிகளோடு நடுங்குகின்றன. இயற்கை வளம் சூழ்ந்த அம்மலையினைக் கண்டு தலைவன் பிரிவை ஆற்றிக்கொள்வேன் எனக் கூறுகின்றாள். இதனை,

**"இனமயில் அகவும் மரம்பயில் கானத்து**
**நரைமுக ஊகம் பார்ப்பொடு பனிப்ப,**
**படுமழை பொழிந்த சாரல் அவர் நாட்டுக்**
**குன்றம் நோக்கினென் – தோழி!**
**பண்டை யற்றோ கண்டிசின் நுதலே?"**

**(குறுந்.பா-249)**

என்ற பாடலானது விளக்குகிறது. இங்கு தலைவனின் மலைவளத்தைக் கூறுமிடத்தில் குரங்கின் இளமைப்பெயரைக் குறிக்கப் பார்ப்பு எனும் சொல் வந்துள்ளதைக் காணலாம். மேலும், குரங்கு எனும் விலங்கிற்குக் குட்டி, மகவு, பிள்ளை, பறழ், பார்ப்பு என்பவையும் இளமைப்பெயர்களாக வருமெனத் தொல்காப்பியம் உரைக்கிறது. இக்கருத்தை,

**"கோடுவாழ் குரங்கு குட்டியுங் கூறுப"**

**(தொல்.பொருள்.மர.நூற்.557)**

**"மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்**
**அவையும் அன்ன அப்பா லான"**

**(மேலது.நூற்.558)**

என்ற நூற்பாக்கள் உணர்த்துகின்றன. பறப்பனவும், தவழ்வனவும் மட்டுமின்றிக் குரங்கினமும் பார்ப்பு என்ற இளமைப்பெயரைப் பெறும் என்பது இங்கு அறியத்தக்கது.

**பறழ்**

பறழ் என்ற இளமைப்பெயர் மூங்கா, வெருகு, எலி, அணில், நாய், பன்றி, புலி, முயல், நரி போன்ற விலங்குகளுக்குப் வழங்கப்படுகின்றது. (தொல்.பொருள்.மர.நூற்-550, 551, 552, 554, 555) திருமணம் செய்யாது காலந்தாழ்த்துகின்ற தலைவன் செவிமடுக்குமாறு தலைவி தோழியிடம் கூறும்போது, மலையில் உள்ள குரங்கின் பறழ் ஒரு மூங்கிலின் கிளையைப் பற்றி மற்றொரு கிளைக்குத் தாவியவுடன் முன்னைய கிளை வேகமாக மேல் நோக்கி நிமிரும். அதுபோலத் தலைவன் தன்னோடு கூடி மகிழ்ந்த காலத்தில் மகிழ்ச்சியாகவும், திருமணம் செய்யாது விலகிச் செல்கின்ற போது கடுமையாகவும் நடந்து கொள்கிறான் என உரைக்கின்றாள். இதை,

**"சிலம்பின் வெதிரத்துக் கண்விடு கழைக்கோல்**
**குரங்கின் வன்பறழ் பாய்ந்தென இலஞ்சி**
**மீன் எறி தூண்டிலின் நிவக்கும் நாடன்**
**உற்றோர் மறவா நோய் தந்து**
**கண்டோர் தண்டா நலம் கொண்டனனே"**

**(ஐங்-278)**

எனும் பாடலினால் அறியமுடிகிறது. இங்கு தலைவனின் இயல்போடு குரங்குக் குட்டியின் செய்கையை ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. இதில் குரங்குக்குட்டியின் இளமைப்பெயராகப் 'பறழ்' என்பது வந்துள்ளதைக் காணமுடிகிறது. மேலும், ஐங்குறுநூற்றில் அமைந்த,

**"கருவிரல் மந்திக் கல்லா வன்பறழ்"**

**(மேலது-272; அ-1)**

என்றும்,

**"புன்தலை மந்தி வன்பறழ் ஆகும்"**

**(மேலது-273; அ-2)**

என்று வரும் பாடலடிகளிலும் குரங்கின் குட்டியைக் குறிக்கப் பறழ் எனும் பதமே பயன்படுத்தப்பட்டுள்ளது. பன்றியின் குட்டியினைக் குறிக்குமிடத்திலும் பறழ் என்னும் சொல் வந்துள்ளதை,

**"வயநாய் எறிந்து வன்பறழ் தழீஇ"**

**(அகம்-248;அ-2)**

எனவரும் அகநானூற்றுப் பாடலடியின் மூலம் அறியமுடிகிறது.

**குருளை**

குருளை எனும் இளமைப்பெயர் நாய், பன்றி, புலி, முயல், நரி என்ற ஐந்து வகை விலங்கிற்கும் வரும் எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. இதனை,

**"நாயே பன்றி புலிமுயல் நான்கும்**
**ஆயுங் காலைக் குருளை என்ப"**

**(தொல்.பொருள்.மர.நூற்-552)**

**"நரியும் அற்றே நாடினர் கொளினே"**

**(மேலது.நூற்-553)**

என்ற நூற்பாக்களால் அறியலாம். தலைவியைப் பிரிந்து சென்று பரத்தையோடு வாழும் தலைமகனின் இயல்பைக் கூறுமிடத்தில் குருளை எனும் இளமைப்பெயரை எடுத்தாளப்பட்டுள்ளது. சான்றாக, திருமணம் முடிந்த சில ஆண்டுகளில் பரத்தையை நாடிச் சென்ற தலைவன் மீண்டும் தலைவியைக் கூடும் எண்ணம் கொண்டவனாய்த் தலைவியிடத்துத் தன்

பொருட்டுப் பேசுமாறு தூதுவர்களை அனுப்பினான். தலைவி, தூதுவர்களிடம் தலைவனின் நிலையைக் கூறுகையில்,

**"புலிகொல் பெண்பால் பூவரிக் குருளை**
**வளைவெண் மருப்பின் கேழல் புரக்கும்**
**குன்றுகெழு நாடன் மறந்தனன்**
**பொன்போல் புதல்வனோடு என்நீத்தானே"**

**(ஐங்-265)**

என மொழிகின்றாள். கொலைத்தொழில் புரிகின்ற புலிகளுக்கு அஞ்சி, தன் குட்டிகளை வெண்ணிறக் கொம்பினைக் கொண்ட ஆண்பன்றி பாதுகாக்கும் மலைநாட்டுத் தலைவன், பொன் போன்ற புதல்வனோடு என்னையும் நீங்கி மறந்துவிட்டான் எனக் கூறித் தலைவி வருந்துகிறாள். இவ்விடத்தில் ஆண்பன்றியின் குட்டியைக் கூறும் போது குருளை என்ற இளமைப்பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று, ஐங்குறுநூற்றில் அமைந்த,

**"புலிகொல் பெண்பால் பூவரிக் குருளை"**

**(மேலது-265, அ-1)**

**"தாஅய் இழந்த தழுவரிக் குருளையொடு"**

**(மேலது-268, அ-1)**

என்ற அடிகளிலும் பன்றியின் குட்டிகளைக் குறிக்கக் 'குருளை' என்ற இளமைப்பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**கன்று**

யானை, குதிரை, கழுதை, கடமை, மான், எருமை, மரை, கவரி, கராகம், ஒட்டகம் முதலிய விலங்குகளுக்குக் கன்று எனும் இளமைப்பெயராக வரும் எனத் தொல்காப்பியம் (தொல்.பொருள்.மர.நூற்-559, 560, 561, 562) சுட்டுகிறது. இதில் கராகம் என்பதைக் கரடி எனப் பொருள் கொள்கிறார் இளம்பூரணர். இதற்குச் சான்றாக, "**கவரி என்று சொல்லப்படுவதும் கராகமென்று சொல்லப்படுவதும் கன்றென்னும் பெயர் பெறும் என்றவாறு. கராகமென்பது கரடி" (மேலது.இளம்.உரை.ப-518)** என்ற உரையானது அமைகிறது. சங்க

இலக்கியங்களில் கராகம் என்பது முதலை என்ற பொருளில் வழங்கப்படுகிறது. இதனை,

**“ஒடுங்கிருங்குட்டத் தருஞ்சுழி வழங்குங்**

**கொடுந்தாள் முதலையும் இடங்கரும் கராமும்”**

**(குறிஞ்.அடி-256-257)**

என்ற அடிகளால் அறியலாம். முதலை, இடங்கர், கராகம் என்ற மூன்று சொல்லும் முதலையைக் குறிக்கும் சொற்களாகும்.

பசுவின் இளமைப்பெயராகக் ‘கன்று’ என்பது சங்க இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ளது. தலைவியின்மேல் காதல் கொண்ட தலைவன், அவளுக்குப் பரிசில் கொடுக்க எண்ணித் தழையாடை ஒன்றைத் தோழியிடம் கையுறைப் பொருளாக வழங்குகிறான். தலைவனின் பரிசிலை வாங்க மறுத்தத் தோழி, மலைமேல் மேய்ந்து கொண்டிருக்கும் செந்நிறப்பசு, காந்தள் மலர்களின் மகரந்தங்கள் பட்டு உடலின் நிறம் மாறியது. அதனால், தாய்ப்பசுவை அடையாளம் காணமுடியாமல் கன்று மயங்கி நின்றது. இதனை,

**“கன்று தாய் மருளும் குன்றநாடன்”**

**(அகம்-359;அ-3)**

எனவரும் பாடலடி உணர்த்துகிறது. இங்கு, நீ கொடுத்த புதிய நிறமுடைய தழையாடையைத் தலைவி அணிந்தால் தாயின் கேள்விகளுக்கு ஆளாகுவாள் எனத் தோழி கூறுகின்றாள். தலைவியின் நிலை பசுங்கன்றின் நிலையோடு ஒப்பிட்டுக் கூறும்பொழுது பசுவின் இளமைப்பெயராகக் ‘கன்று’ என்பது வந்திருப்பதைக் காணமுடிகிறது.

வரைவு நீட்டிக்கும் தலைமகனிடம் தோழி, தாய்முலை பற்றி நிற்கும் யானைக் கன்றினோடு வீட்டுமுற்றத்தில் உள்ள கதிர்களை உண்ணும் யானைகள் வாழும் மலைநாட்டுத் தலைவனே, வறுமையுற்ற காலத்தில் பிறர் செய்த உதவியை மறந்தவன் போல் தலைவியை நீ மறந்திருப்பது மிகுந்த வேதனை அளிக்கிறது எனக் கூறுகின்றாள். இதனை,

**“கன்று தன் பயமுலை மாந்த முன்றில்**

**தினைபிடி உண்ணும் பெருங்கல் நாட!**

**கெட்ட இடத்து உவந்த உதவி கட்டில்**

**வீறுபெற்று மறந்த மன்னன் போல**

**நன்றி மறந்து அமையாய் ஆயின் மென்சீர்க்**

**கலிமயிற் கலாவத்தன்ன இவள்**

**ஒலிமென் கூந்தல் உரியவால் நினக்கே"**

**(குறுந்-225)**

என்ற பாடலால் அறியமுடிகிறது. இப்பாடலில் தலைவனின் மலைநாட்டு வளத்தைக் கூறும் போது யானையின் இளமைப்பெயரான 'கன்று' என்பது வந்திருப்பதைக் காணலாம்.

**மகவு**

உயர்திணை உயிர்களுக்குரிய இளமைப்பெயராக 'மகவு' என்பது அமைகிறது. பாரி மாய்ந்த பின் பறம்பு மலையின் இயற்கை வளமும் முற்றும் அழிந்துவிடும் என எண்ணிய கபிலர் இறுதியாக ஒருமுறை பறம்புமலையின் வளத்தைப் பாடுகையில்,

**"மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்**

**தென்திசை மருங்கின் வெள்ளி ஓடினும்**

**வயலகம் நிறைய புதல் பூ மலர**

**மனைத்தலை மகவை ஈன்ற அமர்க்கண்**

**ஆமா நெடுநிரை நண்புல் ஆர"**

**(புறம்-117;அடி-1-5)**

எனக் குறிப்பிட்டுள்ளார். இப்பாடலில் வானத்திசைகளில் புகை தோன்றினாலும் பறம்பு நாட்டு வயல்களில் விளைச்சல் மிகும். புதர்களில் பூக்கள் மலரும். அந்நாட்டு மக்கள் வாழும் இல்லங்களில் உள்ள பசுக்கள் கன்றினை ஈன்று நீருடன் நல்ல புல்லை மேயும். அத்தகைய வளம் எல்லாம் பாரி மாய்ந்த பின் இராது எனக் கபிலர் வருந்துகிறார். இங்குப் பசுவின் கன்றினைக் குறிக்கையில் உயர்திணையின் இளமைப் பெயராக 'மகவு' என்பது எடுத்தாளப்பட்டுள்ளது.

**மறி**

மறி எனும் இளமைப்பெயரை ஆடு, குதிரை, நவ்வி, உழை, புல்வாய் என்ற விலங்கினங்கள் பெறும் என்பதை,

**“யாடுங் குதிரையும் நவ்வியும் உழையும்**

**ஓடும் புல்வாய் உளப்பட மறியே”**

**(தொல்.பொருள்.மர.நூற்-556)**

என்ற நூற்பா எடுத்தியம்புகிறது. தலைவி, தலைவன்மேல் கொண்ட காதலின் காரணமாக உடல் மெலிந்து பசலைத் துயருறுகின்றாள். அதைக்கண்ட தாயானவள் வேலனைக் கொண்டு வெறியாடல் நிகழ்த்த எண்ணுகிறாள். வெறியாடல் களத்தில் தாய்முலை உண்ணாத சிறு ஆட்டுக்குட்டியைப் பலிகொடுக்க ஏற்பாட்டினைச் செய்கின்றனர். அச்செயல் கண்டு வருந்திய தலைவி தன் தோழியிடம் எம் அழகு நலத்தைக் கவர்ந்த தலைவனிடத்துக் கொண்ட காதல் நோயின் விளைவாய் இத்துயர் பெறுகின்றேன் எனக் கூறுகின்றாள். இவ்விடத்தில் ஆட்டின் குட்டியைச் சுட்டுகையில் ‘மறி’ என்ற இளமைப்பெயருக்குரிய வழக்கினை எடுத்தாளப்பட்டுள்ளது (ஐங்-241). இதேபோல, மானின் இளமைப்பெயராக மறி என்பது வருமென்பதை,

**“செவ்வரைச் சேக்கை வருடைமான் மறி”**

**(குறுந்-187;அ-1)**

என்ற பாடலடியில் எடுத்துரைக்கிறது.

**குழவி**

குழவி என்பது யானை, ஆ, எருமை, கடமை, மரை, குரங்கு, முசு, ஊகம் ஆகிய விலங்குகளின் இளமைப்பெயராகும். உயர்திணை உயிர்களுக்கும் ‘குழவி’ என்ற பெயர் வழங்கப்படுகிறது. இதனை,

**“குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை**

**கிழவ அல்ல மக்கட் கண்ணே”**

**(தொல்.பொருள்.மர.நூற்-567)**

என்ற நூற்பா உரைக்கிறது. ஓரறிவுயிர்க்கும் குழவி என்ற பெயர் வழங்கப்படுகிறது. தலைவன் திருமணம் செய்யாது காலந்தாழ்த்துவது கண்டு வருந்திய தலைவிக்குத் தோழி உரைப்பதாகச் சிறைப்புனம் நின்ற தலைவனுக்கு உரைக்கின்ற ஐங்குறுநூற்றுப் பாடலொன்றில் (ஐங்-216) ‘குழவி’ என்ற இளமைப்பெயர் வந்துள்ளது. குறுகிய முன்னங் கால்களையும்,

நீண்ட உடலையும் கொண்ட ஆண்புலி, இளமையான பெண்யானை ஈன்ற, நடுங்கும் நடையினைக் கொண்ட குட்டியைக் கவர எண்ணி வருவது போல் உன் மேனி பசலை நிறம் பாய்ந்து வருவது எதற்காக? எனத் தோழி கேட்கிறாள். இங்கு பெண்யானையின் குட்டியைச் சுட்டுமிடத்தில் 'குழவி' என்ற இளமைப்பெயர் வந்திருப்பதைக் காணலாம்.

**நிறைவுரை**

பழமையின் வழக்காய்த் தொடர்வது மரபாகும். மக்களின் வாழ்வியலில் அமைந்த பண்பாட்டு நிகழ்வுகள் மரபு என்ற பெயரால் வழங்கப்படுகின்றன. மக்களால் பேணப்பட்டு வந்த உலகியல் வழக்கின் நடைமுறை மரபுகளைப் பிற்காலத்தவரும் அறிந்து, செயல்படுத்தும் வகையில் புலமையில் சிறந்த முன்னோர்கள் அவற்றை இலக்கியங்களில் கருவாக அமைத்துப் பாடியது பழமையான மரபுகள் காலந்தோறும் தொடர்வதற்குத் துணைசெய்கின்றன. வழக்கிலும் செய்யுளிலும் நிலைபெற்ற மரபினை எடுத்துரைப்பதாகத் தொல்காப்பியத்தின் மரபியல் அமைந்திருக்கிறது. மரபுநிலை குறித்த பெயர்களாக இளமைப்பெயர், ஆண்பாற்பெயர், பெண்பாற்பெயர் என்ற மூவகைப்பெயரையும் தொல்காப்பியம் வகுத்துரைக்கின்றது. இளமைப் பெயர்களாகத் தொல்காப்பியம் குட்டி, பிள்ளை, பார்ப்பு, பறழ், குருளை, கன்று, மகவு, மறி, குழவி என்ற ஒன்பதையும் குறிப்பிடுகிறது. மரபுநிலைக்குரிய இவ்விளமைப் பெயர்கள் சங்கச்சான்றோர்களின் பாடல்களில் எவ்விதத் திரிபுமின்றி அதே சொல்லாட்சியுடன் எடுத்தாளப்பட்டுள்ளது. செய்யுளின் உட்பொருளை விளக்கிக் கூறும் இடங்களில் உள்ளுறை, இறைச்சி எனும் இருவகையாகச் சங்க சான்றோர் இளமைப்பெயர்களை எடுத்தாண்டுள்ளனர் என்பது இவ்வாய்வின் மூலம் கண்ட மெய்ம்மையாகும்.

**பார்வை நூல்கள்**

1. இராசமாணிக்கனார்.மா, தமிழ்மொழி இலக்கிய வரலாறு, பூங்கொடி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு – 1963.

2. இளம்பூரணர் (உரை), தொல்காப்பியம் – பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு – 2005.
3. குருசாமி,ச., இளம்பூரணர் உரைநெறி, இராணி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு – 2007.
4. துரைசாமிப்பிள்ளை,ஔவை, ஐங்குறுநூறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், முதற்பதிப்பு - 1957.
5. பாலசுப்பிரமணியன்,கு.வே., சங்க இலக்கியக் கொள்கைகள், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, இரண்டாம் பதிப்பு -2015.
6. பேராசிரியர் (உரை), தொல்காப்பியம் – பொருளதிகாரம், தமிழ்மண் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு – 2003.
7. வேங்கடசாமிநாட்டார்,ந.மு., அகநானூறு, கழக வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு - 2007.
8. மேலவர், புறநானூறு, கழக வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு – 1970.